பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 24 செவ்வாய்க்கிழமை (06-04-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 130

# கிழக்கில் தாக்குதலை தீவிரமாக்க மூன்று இராணுவ வலயங்கள்

## உயர் அதிகாரிகளும் நியமனம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

தென் தமிழீழத்தில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக தென் தமிழீழப் பகுதிகள் மூன்று இராணுவ வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று இராணுவ வலயங்களுக்கும் மூன்று இராணுவ உயர் அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு தென்பகுதி தளபதி பிரிகேடியர் குணவர்த்தனா, தென் தமிழீழப் பகுதி பிரிக்கப்பட்டுள்ளதை ஊர்ஜிதம் செய்துள்ளார்.

பரந்தளவில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலையில் இராணுவ நடவடிக்கைகளை சுலபமாக்கவும் —

சுலபமான தனித்தனி இராணுவ நிர்வாக அமைப்புகளை ஏற்படுத்தவுமே —

தென் தமிழீழப் பகுதி மூன்று இராணுவ வலயங்களாக பிரிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-3)

## மட்டக்களப்பில் நான்கு சிப்பாய்கள் தப்பி ஓட்டம்

ஸ்ரீலங்கா படைகளில் இருந்து இராணுவத்தினர் தப்பி ஓடும் சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.

கடந்த வெள்ளியன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 40ஆம் கிராம இராணுவ முகாமில் இருந்து 4 சிப்பாய்கள் தப்பி ஓடிவிட்டனர்.

இதனை அடுத்து இராணுவத்தினர் அப்பகுதிகளைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர் என்றும் —

தேடுதல் நடத்தும் வேளை, "தப்பி ஓடிய 4 இராணுவச் சிப்பாய்களைக் கண்டீர்களா?" என இராணுவத்தினர் அங்குள்ள மக்களிடம் கேட்டனர் என்றும் —

தப்பி ஓடியவர்களை பிடிக்க முடியாது போகவே இராணுவத்தினர் முகாமுக்குத் திரும்பினர் என்றும் தெரிவிக்கப்பட்டது (இ-3)

## கிளாலி படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஏப். 6

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கம்பன் கழக நிறைவு விழா

யாழ்ப்பாணம் ஏப். 6

கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் நடைபெற்று வரும் அகில இலங்கை கம்பன் கழகத்தின் கம்பன் விழா இன்றுடன் நிறைவுபெறுகிறது.

இறுதி நாளான இன்று நடைபெறும் விழாவின் மாலை நிகழ்ச்சிக்கு தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் தலைமை வகிப்பார்.

இறுதிநாள் விழாவின் இறுதி நிகழ்ச்சியாக கலாவிநோதன் சின்னமணி குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சி இடம்பெறும். [இ-111]

பால் பதனிடும் தொழிற்சாலை

## இயந்திர உபகரணங்கள் கிளிநொச்சி வந்தன

யாழ்ப்பாணம், ஏப் 6

கிளிநொச்சி விவசாய பீடத்தில் அமைக்கப்படவிருக்கும் பால் பதனிடும் தொழிற்சாலைக்கான உபகரணங்களும், இயந்திர வகைகளும் கிளிநொச்சிக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த உபகரணங்களும் இயந்திரவகைகளும் கூட்டுப்படைகள் தலைமை அலுவலக அனுமதி கிடைக்காததால் கடந்த ஆறு மாதங்களாக கொழும்பில் தேங்கிக் கிடந்தன.

கடந்தவாரம் கிளிநொச்சிக்கு எடுத்துவரப்பட்ட இந்த இயந்திரத் தொகுதியில் வெண்ணையை வேறாக்கும் அலகும், பட்டர் தயாரிக்கும் அலகும், பால் கறக்கும் அலகும் அடங்கும் என தெரிவிக்கப்பட்டது. (இ-3)

சுதேச மருத்துவக் கல்லூரி விவகாரம்

## அமைச்சுக்களின் முன்னால் நேற்று உண்ணாவிரதம்

கொழும்பு, ஏப். 6

சுதேச மருத்துவக் கல்லூரி மாணவர்களின் பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படாததுக்கு ஆட்சேபனை தெரிவித்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று கொழும்பில் கல்வி, உயர் கல்வி அமைச்சுக்களின் முன்னால் உண்ணாவிரதம் இருந்தது.

ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் இந்த உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர். அதேசமயம் சுதேச மருத்துவ நிறுவனத்தின் கூரையில் பல்கலைக்கழக மாணவர் நடத்தி வரும் சத்தியாக்கிரகமும் தொடர்கிறது.

இதற்கிடையில் சுதேச மருத்துவக் கல்லூரி மாணவர்களின் பிரச்சினைகள் குறித்து நேற்று இரவு 8.30 மணி அளவில் சுகாதார அமைச்சில் மாநாடு ஒன்று நடைபெற இருந்தது. சுகாதார அமைச்சர் ரேணுகா ஹேரத்தும் இதில் கலந்து கொள்ள இருந்தார். [இ-6]

இனப்பிரச்சினைத் தீர்வை

## மக்களின் ஆணையை பெற முன்வைப்போம்

### அமைச்சர் ரணில் கூறுகிறார்

இனப்பிரச்சினைக்கான தீர்வை மக்களின் ஆணைக்காக முன்வைக்க மாகாண சபை தேர்தலை பயன்படுத்துவோம்.

இப்படிக் கூறினார் கைத்தொழில், விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க.

ஐ. தே. க. தலைமையகத்தில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது :—

"இனப்பிரச்சினைக்கு சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வைக் காணவும், அபிவிருத்தி திட்டங்களை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவும் மீண்டுமொரு தடவை பொதுமக்களின் அங்கிகாரத்தைப் பெறவேண்டியுள்ளது. இதற்காக நாம் அணைவரும் மாகாண சபை தேர்தலில் ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றார். (இ-3)

## நியமனப்பத்திரம் தாக்கல்; கட்சிகள் சுறுசுறுப்பு

கொழும்பு, ஏப். 6

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களுக்கான நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வதில் கட்சிகள் மும்முரமாக நேற்று ஈடுபட்டன.

நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டதும் தேர்தல் சூடு பிடித்துள்ளதாகவும், பொதுக்கூட்டங்கள் பல இடங்களிலும் நடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கண்டி, மாத்தளை, குருணாகல், பதுளை ஆகிய மாவட்டங்களில் போட்டியிடும் தமது வேட்பாளர் பட்டியல்கலை ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுச் சமர்ப்பித்தது

ஜனநாயக ஐக்கிய தேசிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கஷ்டங்கள் மத்தியில் பயில்வோருக்கு உரியவாய்ப்பளிக்க ஏற்பாடுதேவை

## யாழ். மாணவன் மனு மீதான தீர்ப்பில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 6

"கஷ்டங்களுக்கு மத்தியில் படிக்கும் மாணவருக்கு இடம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் பட்சத்தில், மேலும் சரிப்படுத்தல்களை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும்.

வாய்ப்புக்களிலும் கல்வி வசதிகளிலும் உள்ள சமமற்ற தன்மையை குறைப்பதன் மூலமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமே ஒழிய, தன்னிச்சையான முறையில் கோட்டாவை திணிப்பதன் மூலம் அல்ல"

பல்கலைக் கழக அனுமதி தொடர்பாக யாழ். இந்துக் கல்லூரி மாணவனான ராஜதுரை சுரேந்திரன் உயர்நீதிமன்றறத்தில் தாக்கல் செய்த மனித உரிமைமீறல் மனுமீது உயர்நீதிமன்ற நீதியரசர்கள் வழங்கிய தீர்ப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதியரசர் மார்க் பெர்னான்டோ தலைமையிலான — மூன்று நீதியரசர்களைக் கொண்ட — உயர் நீதிமன்றம் கடந்த மாதம் 26 ஆம் திகதி தீர்ப்பு வழங்கியிருந்தது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

புவியியல் அடிப்படையில் திறமைக் கோட்டாவின் உபபிரிவு மூலம் சமத்துவம் தொடர்பான மனுதாரின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது.

முதலாவது பிரதிவாதியான பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் முடிவு சட்டப்படி பிழையானது மட்டுமல்ல. அந்த முடிவு பூரணத்துவமற்ற புள்ளி விவர தரவுகளில் இருந்து பிழையான முறையில் எடுக்கப்பட்ட அனு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகைகளில் முக்கியஇடம்

பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக யாழ். மாணவன் தாக்கல் செய்த வழக்கில் உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை கொழும்புச் சிங்களப் பத்திரிகைகள் பெரும் முக்கியத்துவம் அளித்து பிரசுரித்து இருந்தன. உயர் நீதிமன்றத் தீர்ப்பு 'திவயின' 'லங்காதீப' பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகளாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தன. (இ-3)

## நாச்சிஅம்மன் தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஏப். 6

நல்லூர் பாணன் குளம் நாச்சிஅம்மன் ஆலய தேர்த் திருவிழா இன்று நடைபெறுகிறது.

புதிதாக வடிவமைக்கப்பட்ட அழகிய சித்திரத் தேரில் அன்னை நாச்சிஅம்மன் இன்று வீதிவலம் வருவார்.

(சிறப்பிதழ் 3 ஆம் பக்கத்தில்)

(இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு
தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

**95 கலை, வர்த்தக வகுப்புக்கள்**
**ஆரம்பம்: 10-04-93** 10 மணி

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| கணக்கியல் | — | திரு. S. K. பிரபாகரன் |
| அளவையியல் | — | திரு. விக்கி |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| இந்துநாகரிகம் / இந்துசமயம் | — | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — | திரு. குணராஜா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. சிறிதரன் |

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்

★ அனுமதிகள் வரையறுக்கப்பட்டதால் 200 மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்

(சி/4881)


## நாளை

யாழ். இந்துக் கல்லூரி சாரணர் குழுவின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இதனை ஒட்டிய மலர் வெளியீடும் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

செல்வன் மூ. ஜோதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் யாழ் பல்கலைக்கழக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. க. குகபாலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். [க]

o o o

சுவாமி விவேகானந்தர் சிக்காகோ நூற்றாண்டு நிகழ்ச்சி நாளை புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பருத்தித்துறை கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் அதிபர் திரு. செ. தங்கராசா தலைமையில் நடைபெறும், அதில் சுவாமி சித்ருபானந்தாவின் சிறப்புரை இடம்பெறும். (க)

## தையல் போட்டிகள்

தென்மராட்சி, ஏப். 6

தென்மராட்சிப் பகுதியிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கிடையிலான தையல் போட்டிகள் இம் மாதம் 27ஆம், 28ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (க-117)

## உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

பூஸா தடுப்பு முகாமில் மேற்கொள்ளப்பட்டு வந்த உண்ணாவிரதம் கைவிடப்பட்டுள்ளது.

பெலவத்தை முகாமிலுள்ள கைதிகள் மேற்கொண்ட உண்ணாவிரதமும் கைவிடப்பட்டது. (இ-எ)


"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்"

யாழ்ப்பாணம்

# அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம்
# 35வது ஆண்டு
# தமிழ் இசை விழா

இடம் : நல்லூர் பண்டாரக்குளம் மருதர்வளவு விநாயகர் ஆலய முன்றல்

காலம் : 07 - 04 - 93 தொடக்கம் 16 - 04 - 93 வரை

ரசிகப் பெருமக்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

(25119) செயற்குழு



# கலை, வர்த்தகக் கல்லூரி
C. C. A

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**A/L - 95**

புதிய பிரிவு I

எமது ஆசிரியர்குழு:

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. உதயன் |
| கணக்கியல் | — | திரு. ஶ்ரீ |
| வர்த்தகம் | — | திரு. இரடணம் |
| அளவையியல் | — | திரு. சயந்தன் |
| இந்துநாகரீகம் | — | திரு. ஜோதீஸ்வரன் |
| புவியியல் | — | திரு. வேலா |
| தமிழ் | — | திரு. தங்கராஜா |
| அரசியல் | — | திரு. பஞ்சு |

ஆரம்பம்! 10 - 04 - 1993 | காலை 8-00மணி

குறிப்பு: மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது. ஆகவே முன்கூட்டியே பதிவு செய்து இடத்தை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

-நிர்வாகி

(சி/4733)


## மட்டக்களப்பில் 68,000 பேர் அகதிகள்!

கொழும்பு, ஏப். 6

மட்டக்களப்பு மாவட்டத்தில் 68 ஆயிரத்து 411 பேர் அகதிகளாக உள்ளனர் என அறிவிக்கப்படுகிறது.

16 ஆயிரத்து 490 குடும்பங்களைச் சேர்ந்த இவர்கள் 20 அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-எ)


# நன்றி நவிலல்

1991 ஆம் ஆண்டு க. பொ. த. [உயர்தரம்]
விசேட பரீட்சை

ஶ்ரீலங்கா அரசாங்கத்தினால் விளைவிக்கப்பட்ட அநீதிக்கெதிராக நாம் எடுத்த சட்ட நடவடிக்கைகளுக்குப் பூரண ஒத்துழைப்பும் உதவியும் ஆலோசனையும் வழங்கிய பெற்றோர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர் சங்கத்தினர், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பாடசாலைகளின் பழைய மாணவர் மாணவிகள் சங்கத்தினர்கள், அதிபர்கள் உள்ளூர் வெளியூர் சட்ட நிபுணர்கள், கல்விமான்கள், கல்வி நிறுவனங்கள், நலன்விரும்பிகள், பத்திரிகை நிறுவனங்கள் அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இணைப்பாளர்,
நடவடிக்கைகள் குழுவின் சார்பில்.

24, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
93-04-02

[சி/4886]



# நன்றி நவிலலும்
# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

மலர்வு: 11 — 04 — 1904



உதிர்வு: 05 — 03 — 1993

## திருமதி
## அன்னம்மா பொன்னுத்துரை

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த திருமதி அன்னம்மா பொன்னுத்துரை அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அஞ்சலி செலுத்தியும், நேரில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் கூறியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (06 - 04 - 1993) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

'சிங்கம்ஸ் இல்லம்',
ஸ்ரேசன் வீதி,
கோண்டாவில் மேற்கு.

(25117)



# NEW ENGLISH ACADEMY

ஆரியகுளம்,
யாழ்ப்பாணம்

Special English Classes
G. C. E. (O/L)
1993 (Dec.)

ஆரம்பம்:
06 - 04 - 1993 (இன்று)
செவ்வாய்

By. R. SIVALINGAM
(Dip. in - English)

(பிள்ளைகளின் வசதிக்கேற்ப நேர அட்டவணை வழங்கப்படும்)

(சி-4737)



# 'A' LEVEL CENTRE

Point - Pedro Road,
Ist Lane, Jaffna.

A/L 95ஆம் ஆண்டுக்கான கணித / விஞ்ஞான பாடங்களுக்குமான வகுப்புக்கள் ஆரம்பம்.

வழமையான ஆசிரியர் குழு

ஆரம்பம்;
10 - 04 - 1993 Sat. 6-15

குறிப்பு:
ஒவ்வொரு வருடமும் சகல பாடங்களில் பாடப் பரப்புகள் சிறப்பாகவும் குறித்த கால எல்லைக்கு முன்கூட்டியும் எந்த ஒரு சூழ் நிலையிலும் நிறைவு செய்யப்பட்டு சிறந்த பெறுபேறுகளைப் பெற்று, மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றது எமது நிறுவனம்.

(சி-4883)



# விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்து
2. வளர்ந்தோருக்கான விஷேட ஆங்கில வகுப்புக்கள்

மேற்படி முறைசாராக் கல்வி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் அதிபரிடம் தங்கள் விண்ணப்பப்படிவங்களை 10 - 04 - 93க்கு முன்னர் பூர்த்திசெய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கொத்தணி அதிபர்
மல்லாகம்

மல்லாகம் ம. வி.
(சி/2550)



கடந்த வருடங்களைப் போல் — இம் முறையும எமது நிறுவன மாணவர்கள் அள்ளிக் குவித்த பெறுபேறுகள் எமது ஆசிரியர் குழுவின் திறமைகளை மீண்டும் உறுதி செய்கின்றன.

எமது வழமையான ஆசிரியர் குழுவுடன் சனி, ஞாயிறு செவ்வாய், வியாழன் நாட்களில்,

**O/L** பகல்நேர, மாலைநேர
DAY CLASS & EVENING CLASS

ஆண்டுகள் 4, 5, 6, 7. 8, 9, 10

(ஒவ்வொரு வகுப்பு மாணவர்களுக்கும் இலவச மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுடன்)

## புதிய பிரிவுகள்

ஆரம்பம்: 10 - 04 - 1993

# BOND INSTITUTES

58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-4887)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்—பாணன்குளம் நாச்சி அம்மன் ஆலயம்
# ★ தேர்த் திருவிழா சிறப்பிதழ் ★
06 - 04 - 1993 (செவ்வாய்)

## அருள் சுரக்கும் அன்னை நாச்சி அம்மன்
## புதிய சித்திரத் தேர் ஏறும் திருநாள் இன்று

**கொடியேற்ற விழாவுடன் 24-03-1993, ஆரம்பமான இவ்வருட மஹோற்சவம் இன்று நடைபெறும் தேர்த் திருவிழாவுடனும், நாளை நடைபெறவிருக்கும் தீர்த் தோற்சவத்துடனும் நிறைவு பெறுகின்றது.**

ஆதிபராசக்தியாய், அறிவரிய அற்புதப் பொருளாய் விளங்கும் அம்பிகையானவள் ஆன்மாக்களிடம் கொண்ட பெருங்கருணையினாலே பல்வேறு கோலத்துடன் சுந்தரி- புரந்தரி - நிரந்தரி - துரந்தரி- காமாட்சி - மீனாட்சி - விசாலாட்சி எனப் பல்வேறு நாமங்களுடன் பல்வேறு தலங்களிலும் கோயில் கொண்டெழுந்தருளி வழிபடும் அடியவர் இடர் கெடத் திருவருள் பாலித்து வருகின்றாள்.

இங்ஙனம் ஈஸ்வரியானவள் எழுந்தருளிய தலங்களுள்-எங்கும் நல்லிசை பரப்பிய நல்லூர்ப் பாணன்குளக் கரையில் உள்ள வேலன்பிட்டித் தலமும் ஒன்றாகும். ஆதி நாளையில் அன்னை இங்கு குடிசையைக் கோயிலாகக் கொண்டாள். நின்ற திருவுருவில் மருவு முக நகையும், மலர்க் கண்களும், அபய வரதக் கரங்களும் அமைந்த கோலங் காட்டினாள். வேலன்பிட்டி நாச்சி அம்மன் என்ற நல்லதோர் நாமத்தையும் பெற்றாள். அப் பழைய காலத்துப் பக்தர்கள் பக்தி பெருகிடப் புரிந்த பூசையை உவந்தேற்றாள்.



அவர்கள் புகன்றிடும் நற்றமிழ் கேட்டு நயந்தாள். அப்போது அன்னை அடியார் பலராலும் அறியப்படாதிருந்தாள். எனினும் தரிசித்து முறையிடுவோர் குறை போக்குவதில் முன்னின்றாள்.

ஆண்டுகள் செல்லச் செல்ல நாச்சி அம்மனை வழிபடுவோர் எண்ணிக்கை அதிகரிக்கலாயிற்று. இடைக்காலப் பகுதியில் வாழ்ந்த அன்பர்கள், அடியார்கள், பக்தர்கள் ஒன்று சேர்ந்து குடிசைக் கோயிலைச் சிறப்புக் கோயிலாக்கினர். அதில் அன்னை பராசக்தியைப் பிரதிஷ்டை செய்தனர். வேலன்பிட்டி ஆலயத்தில் நடமாடிவரும் நாச்சி அம்மனின் மகிமை நாற்றிசையும் பரவலாயிற்று. அன்னையின் அற்புதங்களை எல்லாம் தம் மூதாதையர் சொல்லக் கேட்டறிந்தனர் கேட்டனவற்றை எல்லாம் தம் மைந்தர்க்கும் தெரிய வைத்தனர் பக்தர்கள் நாளும் பாடி வணங்கிட நாச்சியம்மன் மீது பத்துத் தோத்திரப் பாடல்களை அக் காலத்துக் கவிஞர் ஒருவர் பாடி வெளியிட்டார். பண்டு தொட்டு வேலன்பிட்டி நாச்சி அம்மன் என அழைக்கப்பட்டு வந்த நாமம் நாளுக்கு நாள் தேய்ந்து மறைந்து போகத் தற்போது பாணன்குளம் நாச்சி அம்மன் என்ற நாமமே பிரபல்யம் அடைந்துள்ளது.

**மகோற்சவம்**

இடைக்காலத்தின் பிற்பகுதியில் ஆலய நிர்வாகம் அடியார்களின் கைக்கு மாறியது. மாறியவுடன் அலங்கார உற்சவம் ஆண்டுதோறும் நடைபெறலாயிற்று. பரிவார மூர்த்திகளும் பிரதிஷ்டை செய்யப் பெற்றனர். மூலஸ்தானம் முதலான அனைத்துத் திருப்பணிகளும் நிறைவுற்றன. தற்போது அலங்கார உற்சவம் மகோற்சவமாக உயர்ந்துள்ளது.

இன்று பங்குனி 24 ஆம் நாள். (6-4-93) திக்கெல்லாம் தெரியத் தேவி புதிய சித்திரத் தேரேறுகின்றாள். அதிகாலையில் அபிடேக ஆராதனைகள் - தீப அலங்காரங்கள். பூசைகள் நிறைவுற்றவுடன் பட்டுடுத்தி, பணிகள் பல பூண்டு, வண்ண மலர் மாலை சூடி, நானாவித வாத்தியங்களும் ஒலிக்க - கொடி, குடை, ஆலவட்டம் அசைந்தாட அழகிய பீடத்தில் அமர்ந்து, அந்தணர்கள் வேதமோத, பக்தர்கள் பல மலர் சொரிய, ஆண் பெண் அடியார்கள் நெருங்கிப்புடை சூழ, தொண்டர்கள் தொடர்ந்து பஜனை செய்ய, கதிரவனும் தேவி தேரேறும் காட்சி காண வருவான் போல் மெல்ல மேலெழுந்து மேட லக்னத்தில் நிற்க ஆடம்பரமாகச் சென்று புத்தம் புதிய சித்திரத் தேரில் அன்னை நாச்சியம்மன் ஆரோகணிக்கும்காட்சி காண்டற்கரியதோர் காட்சியாகும்.

தேர்மிசை ஆரோகணித்த தேவிக்குத் தீபாராதனைகள் நடைபெறுவதும், படபட என்ற ஓசை எழப் பக்தர்கள் தேங்காய்கள் உடைப்பதுவும், வீதி எங்கணும் பரந்து நிற்கும் அடியார்கள் அரகரோகரா கூறுவதும், தொண்டர்கள் நெருங்கி நின்று தேர்வடம் பற்றிப் பிடிப்பதுவும், பக்தி மேலிட்ட பக்தர்கள் பரவசப் பட்டுப் பாடியாடுவதும், அருச்சனைத் தட்டங்களுடன் அடியார்கள் நெரிசல்ப் படுவதும், மேலும் கண்கொள்ளாக் காட்சியுமாகும்.

பவனி வந்த ரதம் பகல் பத்து மணியளவில் இருப்பிடத்திற்கு வந்ததும் தீபாராதனைகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

— ஆலய பரிபாலன சபையார் —

## அருட்கடலாம் அன்னை நாச்சியின் அடியவர்கள் இனிது வாழ்க!

அருட்கடலாய் அண்டங்கள் அனைத்திற்கும் - அன்புபொழி
அன்னை யாகி
மருட் கொண்ட இருள் போக்கி மனங்களிலே - மாண்புமிக
மலிய ஞானம்
தெருட்டும்பேர்த் தெய்வதமாய்த் திகழ்கின்ற - தேவியாம்
நாச்சி அம்மை
பொருட்டெழுநல் லாலயத்தைப் புந்தியினிற் - போற்றுவதெம்
புரைகள் போக்கும்

சிறியதொரு குடிலமைத்துத் திகழ்பாணங் குளமதிலே
தேவி நாச்சி
நிறையுமெழில் மிகக் கொள்ள நூறாண்டுகளின் - மூன்னர்
நேயம் மிக்கே
உறையவென அமைத்ததிரு வமைகோயில் - மிகவோங்கிச்
சிறக்க இன்று
மறைவல்லார் பெரும்பூசைக் கிரமங்கள் அமைந்துளது
மாண்பே யாகும்

ஆராமை மிகவுடைய அடியார்கள் பலர்கூடி
ஆண்டான் டாகப்
பேராத விருப்புடனே பெரும்பணிகள் பலபுரிந்து
பிறங்கு மேன்மை
ஊராகும் திருவேலன் பிட்டியினில் உருவாக்கி
உவக்கும் கோயில்
சீராகத் திகழ்வதனை நினைக்கையிலே உடலெங்கும்
சிலிர்க்கு மம்மா!

தேருண்டு பேருண்டு சிறந்தபரி வாரதே
வதைகள் உண்டு
காருண்டு பொழிமழையாய்க் கருணை மழை - பொழிகின்ற
களிப்பும் உண்டு
சீருண்டு செழிப்புண்டு செல்விதரும் பேறுண்டு
திருவும் உண்டு
கூருண்ட வேலுண்ட விழியுண்டெம் அன்னையருள்
குறைதல் உண்டோ?

**வேறு**

வேலன் பிட்டிசேர் நாச்சியின் பேரருட்
சீலங் கண்டந்தத் தேவியின் தாள் மலர்
சாலச் சென்னி தரிக்கும் அடியவர்
கோல மேன்மைகள் கொண்டென்றும் வாழ்கவே.

- சொக்கன்.

## தேர்த் திருவிழா காண்பதால் தவத்தைச் சேகரிக்கலாம்

சைவ செம்மனச் செல்வர்களே!

பாணன்குளம் ஸ்ரீநாச்சி அம்பாளுக்கு புதிய சித்திரத் தேர் அமைத்து வெள்ளோட்ட விழாவும், ரதோற்சவமும் நிகழ அம்பாளின் திருவருள் பாலித்தமை அறிந்து பேருவகை எய்துகிறோம்.

விழாக்களில் முதலிடம் வகிப்பது தேர்த்திருவிழா. தேரின் அமைப்பில் ஆழமான தத்துவக் கருத்துக்கள் பொதிந்துள்ளன ரதம் முழுமையாகப் பிரபஞ்சத்தைக் குறிக்கும். மேல் விதானத்தில் ஆறு ஆதாரங்களும், கீழ் தளத்தில் நிலை இல்லா மனித வாழ்க்கையும், புராண சிற்பங்களும் உருவாக்கப்பெறும் இவைகளைத் தேர்ந்து கொள்ளுங்கள் என உணர்த்துவது ''தேர்''.

விழாவன்று எழுந்தருளியினது திருமுகப் பொலிவையும், தேஜஸ்சையும் கண்டு களிக்கலாம். இது தவமுடையார்களுக்கே வாய்க்கப் பெறும். தேர்த்திருவிழா காண்பதால் தவம் சேகரிக்கலாம்

இவ்விழா சிறப்புற நிறைவுற எல்லா வகையாலும் தொண்டுகள் புரிந்தும், பெருநிதி உதவிகள் செய்தும் மன நிறைவு கொண்ட அன்பர்களைப் பாராட்டுகிறோம்.

அம்பாளின் பாதகமலங்களை உளமாறத்தியானித்து எல்லோருக்கும் எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஸ்ரீலஸ்ரீ. குருமகாசந்நிதானம்,**
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,
யாழ்ப்பாணம்.

## நாச்சி அம்மன் அருள் நிழலில் அனைவரும் ஆனந்தமுறுக!

நல்லூர் பாணன் குளம் நாச்சியம்மனுக்கு நல்லதொரு சித்திரத்தேர்; சிற்பக்கலைக்கு எடுத்துக் காட்டாக மிளிரும் அழகிய தேர்; அம்பாளின் அடியவர்களின் ஆரா அன்பைக் காட்டும் சிற்பரதம்; இன்று நாம் சித்திரத்தேரில் அம்பாள் பவனிவரும் அற்புத விழாவைக்காணும் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்கிறோம்.

பார்க்கும் திசை தொறும் பாசாங்குசமும் பனிச்- சிறைவண்டார்க்கும்
புதுமலர் ஐந்தும் என் அல்லல் எல்லாம்
தீர்க்கும் திரிபுரையான் திருமேனியும் சிற்றிடையும்
வார்க்குங் குங்கும முலையும் முலைமேல் முத்து மாலையுமே

என்று பாடிய பட்டர் பிரானின் அனுபவத்தை இன்று நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

இது தான் எமது வாழ்வின் முதற் குறிக்கோளாக அமையவேண்டும் காணுகின்ற காட்சி, கேட்கின்ற அருள் மொழிகள், பேசுகின்ற திருவார்த்தைகள் அனைத்தும் ஆலயத்தை மையமாக வைத்து அமையும் போது எமது ஆத்ம தாகம் நிறைவேறுகிறது.

எனவே இன்று நாம் தரிசிக்கும் இவ்விழாவிலே ஆனந்தம் பொங்கி நிற்கிறது அம்பிகையின் அடியவர்களின் ஆதரவும் திருப்பணிச்சபையின் உறுதியான உழைப்பும் சிற்பக் கலாநிதி ஜீவரத்தினம் அவர்களினதும் அவர் தம் குழுவினரதும் கைவண்ணமும் ஒன்று சேர்ந்து இத்தகைய ஒரு அற்புதத்தேரை உருவாக்க முடிந்தது என்றால் அதில் மிகையொன்றுமில்லை.

அகிலாண்டகோடியீன்ற அன்னையின் அருட் பிரவாகம் திக்கெல்லாம் பரவட்டும்! நாச்சியம்மனின் அருள் நிழலில் அனைவரும் அமைதியும் ஆனந்தமும் அடையட்டும் என்று பிரார்த்தித்து அமைகிறேன்.

**தங்கம்மா அப்பாக்குட்டி**
தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

## சக்தி தத்துவம் முழுமையுடன் விளங்கும் பாணன்குளம் பதி

நல்லூர் பாணன்குள நாச்சி அம்பாள் ஆலய மகோற்சவ தினத்தில் புதிதாக அமைக்கப்பெற்ற சித்திரத் தேரில் அம்பிகை ஆரோகணித்து வரும் இந் நன்நாளில் அடியார்க்கு எமது ஆசிகள்

மாத்ரு தேவோபவ என்பது உபநிடத கட்டளை. பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நாம் செய்த புண்ணியம்

அம்பிகை அடியார்களே!

**சைவ** மக்களாகிய எமக்கு ஆலய வழிபாடு மிக அவசியம். ஆலய வழிபாட்டை முறையாகச் செய்து வருபவர்கள் சிறந்த ஆத்ம பலத்தைப் பெறுகின்றனர். ஆலயத்தில் ஆகம விதிப்படி நித்திய, நைமித்தியங்கள் நடைபெற வேண்டும்.

பத்து நாட்களுக்குக் குறையாமல் மகோற்சவம் நடைபெற வேண்டும். மகோற்சவம் தான் இறைவனுடைய பஞ்ச கிருத்தியங்கள் (5 தொழில்கள்) என்று சாத்திரங்கள் கூறுகின்றன. அவையாவன, படைத்தல், காத்தல், அழித்தல் அருளல், மறைத்தல் என்பனவாகும். இதில், இரதோற்சவம் அழித்தல் தொழிலைக் குறிக்கும். (சகல ஜீவன்களின் மும்மலங்களையும் அழித்தல்) அன்றியும், பூமியைத் தேராகவும், சந்திர

(4 ஆம் பக்கம் பார்க்க)

**ச. விஜயரட்ணம்**
தலைவர்,
ஆலயபரிபாலன சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல இன 1½ மாத அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: அ. குகன், 15/2, ஒடை லேன், வண்ணார்பண்ணை (ராதா லேன்), யாழ்ப்பாணம். (25096)

### புலமைப் பரிசில்

கட்டுரை மலர்கள்-60; 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு உகந்தது. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (சி 4727)

### இந்து சமயம்

கடந்த கால வினாத்தாள்களின் தொகுப்பு விலை ரூபா 24/-. தொகுப்பு சொற்பமே சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (25105)

### O/L கணிதம்

Distinction பெறுபேறடைய வாரம் ஐந்து மணித்தியாலங்கள். ஆண்டுகள் 10, 9 உட்பட முப்பது வருட அனுபவமுள்ள B.Sc. (Cey.) ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. (25077)

### மணப்பெண் தேவை

U. K. 31 வயது, 8இல் செவ்வாய், மூலம், B. Sc. என்ஜினியருக்கு உள்ளூர் அல்லது வெளியூர் மணப்பெண் தேவை. சாதகத்துடன் உடன் விண்ணப்பிக்கவும். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். (25108)

### இலவச திருமண சேவை

27 வயது, ரேவதி, வங்கி ஊழியருக்கு தகுந்த மணமகன் தேவை. வெளிநாட்டில் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். சீதனம் வழங்கப்படும். மணமக்களை நாடுபவர்கள்: ஞாயிறு காலையில் சந்திக்கவும். விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (25110)

37 வயது, கேட்டை, செவ்வாய் 8, சுவிஸில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் வேண்டும். இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம் தொடர்பு: ஞாயிறு காலையில். து விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (25111)

### ஜாதகம்

பாவாரிஷ்ட குற்றங்கள், தத்துகள், தடைகள் நீங்க சாந்தி பரிகாரங்களுக்கான குறிப்புரைகளுடன் சாதகம் கணிக்கப்படும். அன்றே பெற்றுக்கொள்ளலாம். ஸ்ரீ சக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 158, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (6095)

---


கலை, வர்த்தகக் கல்லூரி

**C. C. A.**

மனிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

O/L DAY CLASS — புதிய பிரிவு

எமது ஆசிரியர் குழு;

விஞ்ஞானம் — திரு. இரா. செல்வவடிவேல்
கணிதம் — திரு. அருட்செல்வம்
சமூகக்கல்வி — திரு கணேஸ்
வர்த்தகம் — திரு. விக்கி
தமிழ், சமயம் — திரு. கோப்பாய் சிவம்
ஆங்கிலம் — திரு. ஜெயா

ஆரம்பம்: 08 — 04 — 1993

(சி-4731) — நிர்வாகி



**THE JAFFNA EDUCATION CENTRE**

**யாழ்ப்பாணக் கல்வி நிலையம்**

G. C. E. O/L காலை, மாலை வகுப்புகள்
A/L கலை, வர்த்தகம், விஞ்ஞானம்
SPOKEN ENGLISH
SHORT - HAND TYPING
ஆகிய பாடங்கள் இருமொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

புதிய பிரிவுகள் ஆரம்பம்:
08 - 04 - 1993

- நிர்வாகி.

(6096)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 30 — 06 — 1945

மறைவு: 30 — 03 — 1991



**செல்லையா சந்திரசேகரம்**
(இ. போ. ச நடத்துனர்)

திதி: 06 — 04 — 1993

இரண்டாண்டு முடிந்ததையா - இல்லமே
இருண்டதையா - ஆனால்,
எம் மிதயம் இருக்கும் வரை - உன்
நினைவு மறையாதையா!

அன்புத் தெய்வமே!

நின் பிரிவால் வாடும்;
தாய், அம்மம்மா, மனைவி, மக்கள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
மைத்துனிகள், மருமக்கள்,
பெறாமக்கள்.

பத்தமேனி,
அச்சுவேலி.

[25101]


**விக்னா கல்வி நிறுவனம்**

**52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.**

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)
பிரிவுIII

**O/L** DAY CLASSES (8-00 - 2-00)

ஆரம்பம்: 08 — 04 — 93 8மணி

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்
★ வாரத்தில் 4 நாட்கள் நடைபெறும்
★ கணிதம், விஞ்ஞானம் வாரத்தில் 6மணித்தியாலம் நடைபெறும்
★ இவ்வருடம் 5 பிரிவுகள் மட்டுமே ஆரம்பமாகும்.

(சி/4880)


---

## தேர்த் திருவிழா சிறப்பிதழ்

# புதிய சித்திரத் தேர்

அருட்சக்தியாம் அன்னை நாச்சியம்மன் இன்று திருவீதி வலம் வந்த சித்திரத் தேரானது — சிற்பக்கலையின் திறனறிந்த பலராலும் பாராட்டிக்கௌரவிக்கப்பட்டவரும் — சிற்பக்கலை நிபுணர், சிற்ப மேதை, சிற்பகலாமணி, சிற்பரத விற்பன்னர், சிற்பக் கலைச் சக்கரவர்த்தி எனச் சிறந்த பல பட்டங்களைப் பெற்றவரும் — அயல்நாடுகளிலும் தமது சிறந்த புகழைப் பரப்பியவரும் — சைவாசார ஒழுக்கம், கட்டுப்பாடு, கடமை உணர்ச்சி, உண்மை, நேர்மை என்பன நிறைந்தவரும், திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய உரிமையாளருமாகிய ஸ்தபதி ஆ. ஜீவரத்தினம் சிற்பாசாரியார் அவர்களின் கைவண்ணத்தால் உருவாக்கப்பட்டுள்ளது.

அம்பிகையின் திருவருளை முன்வைத்து ஆறுமாத கால எல்லைக்குள் மிக நுணுக்கமாகத் தேரின் அனைத்துத் தத்துவங்களும் பிசகாவண்ணம் இச்சித்திரத் தேரை உருவாக்கித் தந்த திருவாளர் ஆ. ஜீவரத்தினம் அவர்களுக்கும், கூடிப் பணிபுரிந்தோருக்கும், இத்தேர்த்திருப்பணி இனிது நிறைவேற ஊக்கமளித்த அன்பர்களுக்கும், ஆவலுடன் முன்வந்து நிதியுதவி புரிந்த அடியார்களுக்கும் ஆலய பரிபாலனசபையாராகிய நாம் வாழ்த்துக் கூறி நன்றி தெரிவிக்கின்றோம்.

## அருள் சுரக்கும்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றுப் பச்சை சாத்தப்படும். பச்சை சாத்தப்பட்ட பின்னர் தேரில் இருந்து தேவி அவரோகணித்துப் பீடத்தில் அமர்ந்த வண்ணம் ஆடி அசைந்து அடியார் கூட்டத்துடன் ஆலயத்திற் புகும் காட்சியும் தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். புகுந்த ஈஸ்வரிக்கு நவசக்தி அருட்சனையும்- பின்னர் பிராயச்சித்த அபிடேகமும் - பூசையும் நடைபெறும். இத்துடன் தேர்த்திருவிழாவின் சிறப்பும் முற்றுப் பெறுகின்றது.

பஞ்சமும் - பிணியும்
ஆபத்தும் அச்சமும்
நீங்கப் பெற்று அடியார்கள்
அனைவரும்
ஆனந்தமாய் வாழ
அன்னையைப் பிரார்த்திக்கின்றோம்

★

## நாம் செய்த...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சூரியரைச் சில்லாகவும், வேதங்களைக் குதிரையாகவும், பிரம்மாவைத் தேர்ப்பாகனாகவும் கொண்டு, மூப்புரங்களைத் தகனம் செய்து மூன்று அசுரர்களையும் சங்காரம் செய்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

இத்தகைய மகிமை வாய்ந்த இரதமொன்றை எமது குல தெய்வமாம் நாச்சிமார் நாயகிக்கு அமைக்க வேண்டும் என்ற ஒரு எண்ணம் தரும சிந்தனையுள்ள அடியார்கள் சிலரின் இதயத்தில் உதித்ததும், அது இவ்வளவு குறுகிய கால எல்வலயுள் (ஓர் ஆண்டுக்குள்) நிறைவு பெற்றதும் அம்யாளின் திருவருள் என்பது எமது அசைக்க முடியாத நம்பிக்கை ஆகும்.

அன்றியும், கும்பாபிஷேகம் நடைபெற்று ஓர் ஆண்டு நிறைவுபெறும் முன்னர் மகோற்சவம் நடத்தும் அருட்பேறு கிடைக்கப்பெற்றதுவும் அன்றி, மகோற்சவம் தொடங்கி ஓர் ஆண்டு நிறைவுறும் போது அம்பாள் புதிய சித்திரத்தேரில் பவனி வரும் காட்சியைக் காணக் கிடைப்பதும், நாம் அனைவரும் ஜென்மாந்திரத்தில் செய்த பெரும் புண்ணியமே ஆகும்.

இந்த அரும் பெரும் காரியத்தை இவ்வளவு குறுகிய கால எல்லையுள் ஆக்கித் தந்த சிற்ப வல்லுநர் திருவாளர் ஆ. ஜீவரத்தினம் அவர்களையும், குழுவினரையும் மிகவும் பாராட்டுகின்றோம்.

மேலும், இதற்கு உறுதுணையாகவிருந்து பொருள் வாரிவழங்கியவர்கள், மற்றும் உதவிகள் வழங்கியவர்கள் அனைவருக்கும் அம்பாளின் பூரண கிருபா கடாட்சம் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம். ★

## சக்தி தத்துவம்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

துவே,

தாயினும் சிறந்த கோயிலும் இல்லை எனக் கூறப்படுவதுண்டு. தாய்மையின் குணங்கள் பூரண தூய்மை, தன்னலம் மில்லாமை, பொறுமை, மன்னிக்கும் சுபாவம், தியாகம், அன்பு, பக்தி என்பனவாம். இவை எந்த இடத்தில் இருக்குமோ அங்கே சக்தி, தத்துவம், தாய்மை முழுமையோடு விளங்கும்.

அத்தகைய இடம் நல்லூர் பாணன்குளம் பதிவாழ் நாச்சி அம்பாள். பக்தகோடி மக்கள் இவர்களிடம் இக்குணங்கள் குடிகொண்டிருப்பதால்தான் அந்த நாச்சி அம்பாளின் அருள் சக்தியின் பிரதிபலிப்பே இன்று ஒடும் அழகான புதிய சித்திரத்தேர். அதில் அம்பிகை ஆரோகணித்து வரும் இந்த திருக்காட்சியை காண்பதற்கு இந்நன்நாளில் நாம் எல்லோரும் புண்ணியம் செய்தவர்களாகுகிறோம்.

இந்த நாள் எமது தீமைகளை அகற்றி நல்லவர்களாக்கும். இந்த ரத உற்சவத்தின் தத்துவத்தின் படி மக்களின் துன்பங்கள் எல்லாம் விலகி மகிழ்ச்சியாக வாழ வழி வகுப்பாள் அன்னை பராசக்தி. இந்த அழகான தேர் அமைவதற்கு உதவிய ஆலயக் குருமார், திருப்பணிச் சபையார் உதவிகள் பல புரிந்த அடியார்கள், சித்திரத் தேரை அழகாக அமைத்த சிற்பாசாரியார் எல்லோருக்கும் சிறப்புடன வாழ்வதற்கு அம்பிகையின் திருவருள் என்றென்றும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்து, எமது நல்ஆசிகளை வழங்குகிறோம்.

மகோற்சவ குரு:
சிவஸ்ரீ. இராம ஸ்ரீதரக்குருக்கள்,
இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# நச்சுடை மூலோபாயம்

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டிய அவசியத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் வகுக்கும் தீர்வை மக்கள் முன்வைத்து அவர்களின் ஆணையை, அங்கீகாரத்தைப் பெறவேண்டும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய செயற்குழுக் கூட்டத்தில் பேசுகையில் ஜனாதிபதி பிரேமதாசா கூறியிருந்தார். இனப்பிரச்சினைக்குரிய தீர்வை மாகாணசபைத் தேர்தலில் மக்களுக்குத் தெரியப்படுத்தி அவர்களின் ஆணை பெறப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்காவும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் மிக முக்கியமான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில், தலைவர்கள் தாம் நினைத்ததையே செய்யாமல் மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவது நிரந்தரமான ஒரு முடிவாக இருக்கும் என்பது உண்மை தான். அந்தத் தீர்வை சுமுகமாக நிறைவேற்ற முடியும் என்பதையும் மறுப்பதற்கில்லை.

ஆனால் ஆளுங்கட்சியான ஐ. தே. க. இனப்பிரச்சினைக்கு தனது சொந்தத் தீர்வு என்று கூறுவதற்கு எதனையும் வகுத்துள்ளதா? இல்லை. தெரிவுக் குழுவின் சிபார்சுக்குக் காத்திருப்பதாகவே ஜனாதிபதி கூறிக்கொண்டிருந்தார். தெரிவுக்குழுவின் சிபார்சை அடிப்படையாக வைத்து அரசாங்கம் ஒரு தீர்வுத்திட்டத்தை வகுத்து நடைமுறைப்படுத்தும் என்று கடைசியாக டி. எஸ். நினைவுக் கூட்டத்தில் அறிவித்தார்.

தமிழர் தாயகத்தைப் பிரித்து வடக்குக்கும் கிழக்குக்கும் தனித்தனியான சமஷ்டி அலகுகளை உருவாக்குவதே ஐ.தே. கட்சியினதும் திட்டமாக இருக்கப் போகிறது!

தமிழ் மக்கள் தாம் அழிந்தாலும் இந்தத் திட்டத்தை ஏற்கப்போவதில்லை அவர்கள் 45 வருட காலமாகப் போராடியது தங்கள் தாயகத்தைப் பிரிப்பதற்காகவா? பறிகொடுப்பதற்காகவா? இது பிரேமதாசாவுக்கும் அவரது கட்சியினருக்கும் தெரியும்.

எனினும் அவர்கள் தமிழர்களுக்குச் சாதகமான — அவர்களின் அரசியல் உரிமைகளை நிலைநிறுத்தக் கூடிய — ஒரு தீர்வு வந்துவிடாமல் தடுப்பதற்கே சூழ்ச்சி செய்ய முனைந்துள்ளனர். இணைந்திருக்கும் வடக்கு-கிழக்கை பிரிப்பதற்கு தமிழர்களின் விருப்பத்தைக் கேட்காமலே, அவர்களைப் பொருட்படுத்தாமலே சிங்களவரின் ஆணையைப் பெற்று தமிழர் தாயகத்தை நிரந்தரமாக பிரித்துவிடுவதற்கான சதித்திட்டம் இதுவாகும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருக்கும் இணைப்புச் சம்பந்தமான சர்வசன வாக்கெடுப்பை நடத்தாமலே வடக்கு - கிழக்கை உடைத்துவிட இலகுவான வழி இது. தமிழர்களுக்கு சமஷ்டி வழங்குவதற்குச் சிங்கள மக்களின் சம்மதத்தைப் பெற்று விட்டோம். இதற்கு மேல் என்ன செய்யமுடியும் என்று வெளி உலகத்துக்கு 'நியாயம்' காட்டிவிட்டு தமிழர் தாயகத்தைத் துண்டாக்குவதற்கான மிகப் பயங்கரமான சதித் திட்டம் இதுவாகும்.

தமிழர் தாயகத்தைச் சிங்களவர்கள் எந்தக் காலத்திலுமே நியாயமானது என்று எண்ணுவதைத் தடுத்து, இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிட்டாமல் அதனை குழம்பிய குட்டையாக வைத்திருந்து தமது அரசியல் ஆதிக்கத்தை நிலைநிறுத்த பிரேமதாசா வகுத்துள்ள நச்சுடை மூலோபாயம் இது வாகும்.

## ஆலயங்களில்

தாவடி ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன ஆரம்பமாகி 14 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் அடுத்த நாள் தீர்த் த் திருவிழாவும் நடைபெற்று நிறைவுறும். (க)

o o o

உரும்பராய் வடக்கு பேய்ச்சி அம்மன் கோயில் திருவிளக்குப் பூசை இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும்.

இரவு 7-30மணிக்கு சிவஸ்ரீ மு. சோமசுந்தரக் குருக்களுக்கு பாராட்டு விழா நடைபெறும். (சு-154)

o o o

யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 14 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 15 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (க)

o o o

வண்ணை கேசாவில் முத்து விநாயகர் தேவஸ்தானத்தின் அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். (க)

o o o

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதிவிநாயகர் தேவஸ்தானத்தின் பிரம்மோற்சவம் நாளை புதன்கிழமை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும். (க)

o o o

கந்தரோடை கொற்றங்கட்டு ஞானவைரவர் கோவில் மணவாளக் கோல விழா நாளை புதன் நடைபெறும். பகல் வைரவப் பெருமானுக்கு சங்காபிஷேகமும், பின்னர் அன்னதானமும் நடைபெறும். (க-152)

o o o

மந்திகை, ஏப். 6

அல்வை வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் வருடாந்த மகா சங்காபிஷேகமும், இளைஞர் விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறுகின்றன. (இ-87)

o o o

வட்டுக்கோட்டை உடுக்கியவளை மகா கணபதிப்பிள்ளையார் கோயிலில் இன்று செவ்வாய்க்கிழமை மணவாளக் கோல விழா நடைபெறுகிறது. பகல் சங்காபிஷேகமும் மாலை விசேட நிகழ்ச்சிகளும் தண்டிகை உற்சவமும் நடைபெற உள்ளன. (இ)

## பாடசாலைகளில்

உடுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை புதன் பிற்பகல் 3 மணிக்கு அதிபர் திரு க. சிவஞானம் தலைமையில் நடைபெறும். (த-152)

## வேப்பமரத்தில் பிள்ளையார் முகம்

யாழ்ப்பாணம், ஏப். 6

நல்லூரில் வேப்பமரமொன்றில் பிள்ளையார் முகம் தோன்றியுள்ளது.

நல்லூர் சட்டநாதர் ஆலயத்துக்குச் சமீபமாக பருத்தித்துறை வீதியில் உள்ள வீட்டு வளவில் வேப்ப மரமொன்றின் அடிப்பாகத்தில் பிள்ளையார் முகம் காணப்பட்டது. இந்த வேப்பமரத்தை தறிக்க முற்பட்டவர்களில் ஒருவர் நேற்றுக் காயமடைந்தார். அதனால் மரம் தறிப்பது நிறுத்தப்பட்டது.

வேப்பமரத்தில் தோன்றிய முகத்தைப் பார்ப்பதற்கு ஏராளமான மக்கள் நேற்று அந்த இடத்தில் கூடினர். (அ-3)

# யாழ். பல்கலைக்கழகத்துக்கு 12 கம்பியூட்டர்கள்

## குமணவில் எடுத்துவரப்படும்

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ். பல்கலைக்கழகத்துக்கு 12 கம்பியூட்டர்கள் இடைக்கவிருக்கின்றன.

புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட இந்த கம்பியூட்டர்கள் அடுத்து வரும் 'குமண' கப்பலில் எடுத்துவரப்படவிருக்கின்றன.

இந்த கம்பியூட்டர்களை எடுத்து வர கூட்டுப்படை தலைமையகம் முன்னர் அனுமதி மறுத்து இருந்தது தெரிந்ததே.

அதேவேளை—

யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவ துறைக்கு போதிய மருந்து வகைகள் எடுத்துவரவும்—

விளையாட்டுத்துறைக்கு போதிய உபகரணங்கள் எடுத்துவரவும் — அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. [இ-3]

# இன்று நடப்பவை

யாழ்ப்பாணம் கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீடத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பக 4 30 மணிக்கு திருமுறைகளில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள்'' எனும் பொருள்பற்றி சைப்புலவர் திரு. மு. திருஞானசம்பந்தப் பிள்ளை உரை நிகழ்த்துவார். (க)

o o o

''சாயி பஜனாவளி'' எனும் நூல் வெளியீடு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு நாச்சிமார் கோவிலடி காங்கேசன்துறை வீதி, 646 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள பிரசாந்தி நிலையத்தில் நடைபெறும்.

o o o

நவாலி முருகானந்தா சன சமூக நிலையம் கொண்டாடும் முழு நிலா விழாவும் அன்னை பூபதி விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு நவாலி முருகமூர்த்தி கோவிலில் நடைபெறும்.

சொற் பொழிவுகள், கவியரங்கம், நாட்டிய நடனங்கள், பட்டி மண்டபம் ஆகியன விழாவில் இடம்பெறும். (க)

o o o

யாழ்ப்பாணம்' ஏப். 6

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வேலணைப் பிரிவின் தையல் பொருட்காட்சியும் விற்பனையும் இன்று செவ்வாய் காலை 10.30 மணிக்கு யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறும் (இ)

o o o

தென்மராட்சி. ஏப். 6

கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலய தமிழ்தின விழா இன்று காலை 9. 30 மணிக்கு வித்தியாலய அரங்கில் அதிபர் நா. சத்தியநாதன் தலைமையில் நடைபெறும். (இ-117)

o o o

நவாலி, ஏப். 6

நவாலி முருகானந்த சன சமூக நிலையத்தினரால் நடத்தப்படும் மாதாந்த பௌர்ணமி கலை விழா இன்று மாலை 6 மணி முதல் நிலைய வெள்ளி விழா மண்டபத்தில் நடைபெறும். (இ-100)

# பஸ்கள் தரித்து நிற்க ஸ்ரான்லி வீதியில் இடம்

யாழ்ப்பாணம், ஏப். 6

குடாநாட்டுப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பஸ்கள் தரித்து நிற்பதற்கு ஸ்ரான்லி வீதியில் ரயில் நிலையத்துக்கு பின்புறமாக இடம் ஒதுக்கப்பட உள்ளது.

இங்கிருந்து புறப்படும் பஸ்கள் யாழ். பஸ் நிலையம் சென்று அங்கிருந்து வழமையான பாதை ஊடாக போக்குவரத்தில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். பஸ்நிலையத்தில் பஸ்கள் நிறுத்தப்படுவதால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதே பஸ்தரிப்புக்கு வேறு இடம் ஒதுக்கப்படுவதன் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது (இ-3)

## மாகாணசபைத் தேர்தல்கள்;

# சு. க. வேட்பாளர்களையே அனுரா ஆதரிப்பாராம்!

கொழும்பு, ஏப். 6

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் சுதந்திரக்கட்சி வேட்பாளர்களையே ஆதரித்துப் பேசுவேன்.

சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் பதில் எதிர்க் கட்சித் தலைவருமான திரு. அனுரா பண்டாரநாயக்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் அனைத்தும் தேவையற்ற பிரச்சினைகளைத் தவிர்த்துக கொள்ளக்கூடிய விதமாக தமது நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் வாக்குகளில் குறைந்த அளவானதையே ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் பிரித்துக் கொள்ளக்கூடியதை நாம் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (த எ)

# சிறிமாமீது இடைக்காலதடை நீதிமன்றம் ஏற்க மறுப்பு!

கொழும்பு, ஏப். 6

கட்சி உறுப்பினர் அல்லாதோரை சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர்களாக திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நியமித்து வருவதை கட்டுப்படுத்த அவர் மீது இடைக்காலத் தடை விதிக்கும்படி சமர்ப்பிக்கப்பட்ட மனுவை கொழும்பு மாவட்ட நீதிபதி மகாநம திலகரத்தினா ஏற்க மறுத்து விட்டார்.

சுதந்திரக் கட்சியின் களுத்துறை மாவட்ட அமைப்பாளராக ரெஜினோல்ட் குரே என்பவரை திருமதி பண்டாரநாயக்கா நியமித்ததை ஆட்சேபித்து இம்மனு தாக்கல் செய்யப்பட்டது.

கட்சியின் உள்விவகாரங்களில் நீதிமன்றம் தலையிட முடியாது என்று திருமதி பண்டாரநாயக்காவின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட பதில் மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது

## பாடசாலைகள் 8 ஆம் திகதி மூடப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஏப். 6

பாடசாலைகள் அனைத்தும் முதலாம் தவணைக்காக 8ஆம் திகதி மூடப்பட்டு இரண்டாம் தவணைக்காக மே மாதம் 3 ஆம் திகதி திறக்கப்பட உள்ளது. (இ-152)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 6

''உதயன்'' நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ் செயலகம் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெறும் ஆண்கள் பிரிவு அணியைத் தெரிவு செய்வதற்கான ஆட்டமும் பெண்கள் பிரிவில் அரையிறுதியாட்டமும் இன்று மாலை யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடைபெறும்.

பிற்பகல் 3 30 மணிக்கு நடைபெறும் பெண்கள் பிரிவு அரையிறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து திருக்குடும்ப கன்னியர்மடம் ''ஏ'' அணி மோதும்

ஆண்கள் பிரிவில் மூன்றாம் இடத்தைப் பெறும் அணியைத் தெரிவு செய்வதற்காக நடைபெறும் ஆட்டத்தில் யாழ். ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து யாழ். பற்றிரிசியன்ஸ் மோதும். (உ)

o o o

சுன்னாகம் ஸ்கந்தா ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஸ்கந்தா மைதானத்தில் நடத்திவரும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

O காங்கேசன்துறை யங் றோயல் அணி எதிர் அராலி ஸில்வர் ஸ்ரார் அணி

O மல்லாகம் ஜொலி போய்ஸ் அணி எதிர் இளவாலை யங் ஹென்றீஸியன் அணி.

o o o

நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று மாலை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

O யங்றோயல் வி. க. அணி எதிர் வட்டு வி. க. அணி.

O சென் அன்ரனிஸ் வி. க. அணி எதிர் சென். நிக்கிலஸ் வி. க. அணி. (உ)

## பண்டிதர் வகுப்பு

யாழ்ப்பாணம், ஏப் 6

ஆரிய திராவிட பாஷா பிவிருத்திச் சங்கம் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆதரவுடன் கோட்டங்கள் தோறும் நடத்தி வரும் பிரவேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் வகுப்புகள் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நாளை புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு வைபவரீதியாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

அன்றைய தினமே பாடத்திட்டம் வழங்கப்பட்டு முதல் நள் வகுப்புகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-3)

## இசை விழா

யாழ்ப்பாணம், ஏப் 6

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம் — பண்டாரக்குளம் மருதவளவு விநாயகர் ஆலய உற்சவத்தை முன்னிட்டு நடத்தும் இசைவிழா நாளை ஆரம்பமாகின்றது.

அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் 35 ஆவது ஆண்டு இசை விழாவாக இது அமைகின்றது

நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு விநாயகர் ஆலய மூன்றலில் எதிர்வரும் 16 ஆம் திகதுவரை விழா நடைபெறும் தினமும் இரவு 7 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

முதல் நாள் விழாவில் 35 ஆம் ஆண்டுத் தமிழிசை விழாத் தலைவர் மிருதங்க மணி திரு. எம். என். செல்லத்துரைக்கு 'இசையரசு' என்னும் பட்டம் வழங்கப்படும் அவருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கும் நிகழ்ச்சியும் இடம்பெறும் (இ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்திய - இலங்கை ஒப்பந்தம் காமினி கட்சி ஆதரவாம்

கொழும்பு, ஏப். 6

1987 இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய — இலங்கை உடன்பாட்டை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இன்னும் ஆதரித்து நிற்கிறது.

முன்னாள் அமைச்சரும் முன்னணியின் உபதலைவருமான காமினி திஸநாயக்கா முன்கண்டவாறு கூறினார்.

# மாட்டு வண்டி சவாரி

ஆவரங்கால் மணற்பகுதி வீனஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாட்டு வண்டி சவாரிப் போட்டி எதிர்வரும் **11-4 93** ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் **2.00** மணிக்கு ஆவரங்கால் சவாரி மைதானத்தில் நடைபெறும்.

பார்வையாளருக்கான பிரவேசம்
ரூபா 10. 00

வீனஸ் வி. க.
தலைவர்.

(5873)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா பத்மநாதன்

(Retired Salesrep ARPICO)

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டு கொழும்பில் வசித்துவந்தவருமான செல்லையா பத்மநாதன் 31-03-1993இல் கொழும்பில் காலமானார்.

இவர் சுகிர்தத்தின் அன்புக் கணவரும், நந்தா பத்மநாதன் (கனடா, சூரி பத்மநாதன் (கொழும்பு), யசோதரா (லண்டன்), சுபத்திரா (கொழும்பு), டிலித்திரா (லண்டன்) ஆகியோரின் தகப்பனாரும், காயத்திரி (கனடா), கமலினி சபேந்திரன் (லண்டன்), சிவதாசன், விஜித் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், வைசாலி, குசாலினி, சஞ்சே, சதிசன், சங்கி, துவாரகா, பியான்கா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 04-04-1993இல் கொழும்பில் நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
த. பாலச்சந்திரன் (சந்திரன்),
பேறாமகன்,
31, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.

39, Pamankade Lane,
Colombo-6. (6097)

## புஷ்பா தம்பிராசா

பண்டத்தரிப்பைச் சேர்ந்த புஷ்பா தம்பிராசா காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் இன்று 6-4-93) செவ்வாய்க்கிழமை பி. ப 3 00 மணியளவில் பண்டத்தரிப்பில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
A. V. துரையப்பா
(தகப்பனார்)

''இராஜஸ்தான்''
சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு. (25120)

## திருமதி தெய்வானைப்பிள்ளை மாணிக்கம்

(பன்னாலை)

பன்னாலையைச் சேர்ந்த திருமதி தெய்வானைப்பிள்ளை மாணிக்கம் 05 4-93 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் அம்பலம் மாணிக்கத்தின் அன்பு மனைவியும், வெற்றிவேல் (இளைப் ாறிய ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை), இரத்தினசிங்கம் (இளைப்பாறிய பிரதம இரசாயனப் பகுப்பாளர், மலேசியா), சத்தியபாமா, திருநாவுக்கரசு (ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், மலேசியா), சத்தியமூர்த்தி (முகாமையாளர், மலேசியா), சத்திய ஞானலட்சுமி, சத்தியபாலதேவி (இளைப்பாறிய ஆசிரியை, அருணோதயா கல்லூரி, அளவெட்டி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சகுந்தலாதேவி, யோகாம்பிகை (மலேசியா), எஸ் எஸ். நடராசா (இளைப்பாறிய லிகிதர், தொழிற் கந்தோர் யாழ்ப்பாணம்), செல்வராணி, அம்பிகாதேவி (மலேசியா), எஸ். கே. இந்திரராசா (ஆசிரியர், விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்), ஆர். யோகேஸ்வரன் (கணக்காளர், ஓமான்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சக்திவேல், வனசா, தர்மேந்திரா, அனுஷா, திருமதி புனிதவதி சுகுமார், லோகவதி, கணேஷ், சுகந்தி, நவீந்திரன், சதீஸ்வரன், லோஜினி ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 6-4-93 மு. ப. 11.00 மணியளவில், சுழிபுரம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரிகைக்காக திருவடி நிலை மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
மா. வெற்றிவேல்
[மகன்]

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம். (25122)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292 2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 06 - 04 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

### நியமனப்பத்திரம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணி நுவரேலியா, கேகாலை, பதுளை, இரத்தினபுரி, குருணாகல் ஆகிய மாவட்டங்களில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியல்களை நேற்றுச் சமர்ப்பித்தது.

நுவரேலியா மாவட்டத்தில் ஒரு சுயேச்சைக் குழுவும் கொழும்பு மாவட்டத்தில் இன்னொரு சுயேச்சைக் குழுவும் நேற்று தங்கள் வேட்பாளர் பட்டியல்களைச் சமர்ப்பித்தன.

(இ எ)

### கஷ்டங்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மானங்களை அடிப்படையாகக் கொண்டதுமாகும்.

**உரிமை மறுப்பு**

பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறைக்கு மனுதார் அனுமதிக்கப்பட்டிருக்கவேண்டும் என்பது தெளிவாகிறது. மனுதாரின் நிலையில் உள்ள, இந்த நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்காதவர்களின் அடிப்படை உரிமைகளும் மீறப்பட்டுள்ளன என்பது ஏற்றுக் கொள்ளப்படவேண்டும்.

அண்மைக்கால சமூக மற்றும் அரசியல் ரீதியில் நிலவும் அமைதியின்மை, நியாயமற்ற பல்கலைக்கழக அனுமதிகளுக்கு ஒரு காலாக இருந்தது என்பது நன்கு தெரிந்த விஷயமாகும்.

இதற்கு முன்னர் ஒரு வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பு, ஆகஸ்ட் மற்றும் ஏப்ரல் பரீட்சைகள் குறித்து பாரபட்சம் காட்டப்படக்கூடாது என்ற முடிவை எடுக்க நீதிமன்றத்தை நிர்ப்பந்தித்துள்ளது.

ஏப்ரல் பரீட்சைக்குத் தயார் செய்ய பரீட்சார்த்திகளுக்கு மேலும் 8 மாதங்கள் கிடைத்தன என்பது பாரபட்ச நடவடிக்கையை நியாயப்படுத்துவதற்கான அடிப்படையாக எடுத்துக் கொள்ளமுடியாது

எனினும்—

மனுதாரரான மாணவர் தாம் மின்சாரம் இல்லாத நிலையிலும் மண்எண்ணெய், டோர்ச் பட்டரிகள் மற்றும் மெழுகுதிரிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையிலும் பரீட்சைக்குத் தயார் செய்யவேண்டியிருந்ததாகக் கூறியுள்ளார்.

இப்படியான கஷ்டங்களுக்கு மத்தியில் படிக்கும் மாணவருக்கு இடம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் பட்சத்தில், மேலும் சில சரிப்படுத்தல்களை (Adjustments) செய்யவேண்டிய அவசியம் ஏற்படும்.

வாய்ப்புக்களிலும் கல்வி வசதிகளிலும் உள்ள சமமற்ற தன்மையை குறைப்பதன் மூலமே இந்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமே ஒழிய, தன்னிச்சையான முறையில் கோட்டாவைத் திணிப்பதன் மூலம் அல்ல.

பிரதிவாதிகள் தங்களுக்கு ஆதரவாகச் சமர்ப்பித்த தஸ்தாவேஜுகள் அவர்களின் கூற்றுக்களை ஆதரிக்கவில்லை.

நீதிமன்றத்தை வெற்றிகொள்ள வேண்டும் என்ற முயற்சியாக சமர்ப்பிக்கப்பட்ட பல தஸ்தாவேஜுகளில் இருந்த வெறும் புள்ளி விவர தகவல்கள் குறித்து பல்கலைக் கழக மான்ய ஆணைக்குழு முறையான பகுப்பாய்வு நடத்தவில்லை.

பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு கடைப்பிடித்த நடைமுறைகளில், பல காரணங்களுக்காக பாரதூரமான குறைகள் காணப்பட்டன.

**அனுமதி முறை**

தற்போதைய பல்கலைக் கழக அனுமதி முறை பூரணமாக ரத்துச் செய்யப்படவேண்டும். உயர்கல்வித் துறையில் பல்கலைக் கழக அனுமதி குறித்து வகுக்கப்பட்டு, அமுல் நடத்தப்படும் அனுமதி முறை நியாயமானதாக இருப்பதுடன், அது நியாயமானதாக மக்களுக்கு காட்டப்படவேண்டும்.

இப்படி தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-எ-3)

# தெரிவுக்குழு யாழ். சென்று புலிகளுடன் பேசவேண்டும்

## மங்கள முனசிங்காவிடம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 6

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு யாழ்ப்பாணம் சென்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேச்சுக்கள் நடத்த வேண்டும்.

இவ்வாறு; யாழ். மாவட்ட எம்பியான திரு. கே. ஸ்ரீநிவாசன், தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்காவைச் சந்தித்து கோரியுள்ளார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ-எ)

# குமாரியில் தபால்கள் எடுத்துச் செல்லப்படும்

யாழ்ப்பாணம் ஏப். 6

குமாரி கப்பலில் தபால்களை எடுத்துச் செல்வதற்கு வசதியாக இன்று செவ்வாய் காலை 9. 00 மணிக்கு முன்னதாக யாழ். பிரதம தபாலகத்தில் இருக்கும் தபால் பெட்டியில் தபால்களை சேர்க்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் குமண கப்பலில் எடுத்துவரப்படும் பொருள்களின் விவரப் பட்டியலில் தபால் பொதிகள் குறித்து எதுவும் தெரிவிக்கப்படாத போதிலும் அதில் 115 தபால் பொதிகள் எடுத்துவரப் பட்டிருப்பதாக தெரிவிக்கப் படுகிறது

இத்தபால் பொதிகளை எடுத்துவருவதற்காக யாழ். பிரதம தபாலக ஊழியர்கள் நேற்று பருத்தித்துறை சென்றிருந்தனர். இன்று விடுமுறை தினமாகையால் நாளை முதல் அவை தரம் பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-5-162)

# இலங்கை இனப்பிரச்சினை: கனடா - ஆஸி இணைந்து செயல்படவேண்டும்

## ஆஸ்திரேலிய கூட்டுக்குழுவலியுறுத்து

சிட்னி, ஏப். 6

இலங்கை இனப்பிரச்சினையில் பேச்சுகளை ஏற்படுத்துவதில் உதவுவதற்காக சர்வதேச அவதானிகள் குழு ஒன்றை அமைப்பது,

— வடமாகாண நிலைவரத்தைக் கண்காணிப்பது,

— மனிதாபிமான உதவிகள் பங்கீடு செய்யப்படுவதை மேற்பார்வை செய்வது,

— இலங்கை மீது பூரண ஆயுதத்தடை விதிப்பதை பரிசீலிப்பது,

ஆகியன குறித்து ஐநா அமைப்பின் பல் நாடுகள் ஏஜென்ஸிகள் அல்லது பொது நலவாய அமைப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருவதில் கனடாவுடன் இணைந்து ஆஸ்திரேலிய அரசும் செயல்படுதல் வேண்டும்.

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தின் வெளிவிவகார, பாதுகாப்பு மற்றும் வர்த்தகக் கூட்டுக்குழு இவ்வாறு வலியுறுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பரில் இக்கூட்டுக்குழு வெளியிட்ட அறிக்கையில் இச் சிபார்சுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இக்கூட்டுக் குழுவுக்கு செனட்டர் சாச்ற் (Schacht) தலைமை வகித்தார்.

218 பக்கங்கள் கொண்ட கூட்டுக் குழுவின் அறிக்கையில், 'பிராந்தியம்' என்ற தலைப்பில் இலங்கையில் இடம் பெறும் மனித உரிமை மீறல்கள் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளன

இலங்கை சுதந்திரம் அடைந்த நாள் முதல் பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு, தீவிரப்படுத்தப்பட்டு வரும் பாரிய அநீதி தான் இம் மோதலுக்கு மையமாக அமைந்துள்ளது என்று, குழுவின் அறிக்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

நன்றி; ஹொட்ஸ் பிரிக், தமிழ்நேசன்

(த-எ)

# ஐ. தே. கவை இலகுவில் தோற்கடிக்க முடியாது

## இப்படிக் கூறுகிறார் அனுரா

கொழும்பு, ஏப் 6

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை இலகுவாகத் தோற்கடித்துவிட முடியாது.

பதில் எதிர்க்கட்சித் தலைவரும், சுதந்திரக் கட்சி எம்.பியுமான அனுரா பண்டாரநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக முன்னணி எதிர்க் கட்சிகள்— சுதந்திரக் கட்சித் தலைமையில்— பொதுமக்கள் ஐக்கிய முன்னணி என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை உருவாக்கியிருப்பதும்—

அந்தக் கட்சிக்கு தேர்தல் ஆணையாளர் அங்கிகாரம் வழங்கி, அதற்கு 'கதிரை'ச் சின்னம் வழங்கப்பட்டிருப்பதும் தெரிந்தவையே.

# ஜி. ஏ. கியூ. பரீட்சைக்கான அனுமதி அட்டை

யாழ்ப்பாணம், ஏப். 6

கொழும்பில் நடைபெறவுள்ள பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் படிப்பு [ஜி. ஏ. கியூ] பரீட்சைக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டை, நேரசூசி என்பன இங்கு வந்து சேர்ந்துள்ளன.

சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் அவற்றை யாழ். செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். சிவபாதத்திடம் இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் இப்பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது பின்னர் அந்த முடிவில் மாற்றம் செய்யப்பட்டு பரீட்சை கொழும்பில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது தெரிந்ததே.

[இ-5-162]

# இன்றைய கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ் ஷப்றா அணிக்கும் மானிப்பாய் பரிஷ் அணிக்கும் இடையிலான ஐம்பது மட்டுப் படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட சினேகபூர்வமான கிரிக்கெட் ஆட்டம் இன்று காலை 9 மணிமுதல் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org